# தமிழ்நாடு
# மாநில தேர்தல் ஆணையம்

## ஊரக உள்ளாட்சி தேர்தல்கள்

# வேட்பாளர் கையேடு

05.08.2021 வரை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது

**கையேடு – 6**

# வேட்பாளர் கையேடு

ஊரக உள்ளாட்சி தேர்தல்கள்
கையேடு – 6

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்
சென்னை

# வேட்பாளர் கையேடு

## கையேடு – 6

©
2016
7,49,000 பிரதிகள்

திருத்தப்பட்டது – 2019
3,77,500 பிரதிகள்

05.08.2021 வரை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது

தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் வெளியீடு

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்
208/2, ஜவஹர்லால் நேரு சாலை (100 அடி சாலை)
அரும்பாக்கம் (Opp. CMBT), சென்னை 600 106

தொலைபேசி எண்கள்
044–2363 5010 மற்றும் 044–2363 5011

நிகரி எண்கள்
044–2363 8282 மற்றும் 044–2363 8283

E-mail ID : tnsec.tn@nic.in
Website : www.tnsec.tn.nic.in

அச்சிட்டோர்

அரசு மைய அச்சகம்,
சென்னை 600 079

# உள்ளடக்கம்


| பகுதி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பொது ... ... ... | 1 |
| 2. | தகுதி மற்றும் தகுதியின்மை ... ... | 2 |
| 3. | தேர்தல் அறிவிப்பு, தேர்தல் அட்டவணை மற்றும் வேட்புமனு தாக்கல் | 6 |
| 4. | ஆய்வு செய்தல் ... ... ... | 10 |
| 5. | வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல் ... ... | 13 |
| 6. | சின்னங்கள் ஒதுக்கிடுதல் ... ... | 13 |
| 7. | தேர்தல் முகவர் (Election Agent) ... ... | 17 |
| 8. | வேட்பாளர்கள் தேர்தல் காலத்தில் செய்ய வேண்டியவை மற்றும் செய்ய வேண்டாதவை பற்றிய குறிப்பு ... ... | 18 |
| 9. | வாக்காளரை வாக்குக்காக அணுகும்போது கடைபிடிக்க வேண்டிய சில கட்டுப்பாடுகள் ... ... ... | 23 |
| 10. | வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கப்படுவோர்... ... | 24 |
| 11. | வாக்குச்சாவடி முகவர்கள் ... ... | 24 |
| 12. | வாக்குச்சாவடி முகவரின் கடமைகள் ... ... | 26 |
| 13. | வாக்குச்சாவடி முகவர் கொண்டு வரக்கூடியவை ... | 27 |
| 14. | வாக்குச்சீட்டுகளை எண்ணுதல் ... ... | 27 |
| 15. | முடிவுரை ... ... ... | 28 |

ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள்

# வேட்பாளர் கையேடு

**முன்னுரை**

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட விழையும் வேட்பாளர்கள், தேர்தல் நடப்பதற்கு முன் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களாகிய உங்களுக்கு நான்கு வகை வாய்ப்புகள் உள்ளன. கி*uhk* ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் போட்டியிடலாம். இதற்கான விவரங்கள் மற்றும் விளக்கங்கள் இக்கையேட்டில் வழங்கப்பட்டுள்ளன.

பகுதி – 1

## பொது

**1.1. இட ஒதுக்கீடு**

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு தேர்தலிலும் (உறுப்பினர் பதவியிடத்திற்கான தேர்தலிலும், தலைவர் பதவியிடத்திற்கான தேர்தலிலும்) குறிப்பிட்ட விகிதத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை குறித்த விவரங்களை தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலரால் வெளியிடப்படும் தேர்தல் அறிவிப்பிலிருந்து (Election notice) நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**1.2. வாக்காளர் பட்டியல்**

நடப்பு சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு வாக்காளரும் அப்பகுதிக்கு தொடர்புடைய கிராம ஊராட்சி வார்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற தகுதியுடையவராவார். ஒரு கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளின்

வாக்காளர் பட்டியல்களையும் ஒருங்கிணைத்தால் அல்லது தொகுத்தால், அதுவே அந்த கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியல் ஆகும். ஒரு ஊராட்சி ஒன்றிய வார்டுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சி வார்டுகளின் வாக்காளர் பட்டியல்களை ஒருங்கிணைத்தால், அதுவே அந்த ஊராட்சி ஒன்றிய வார்டுக்கான வாக்காளர் பட்டியல் ஆகும். அதே போன்று ஒரு மாவட்ட ஊராட்சி வார்டுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சி வார்டுகளின் வாக்காளர் பட்டியல்களை ஒருங்கிணைத்தால், அதுவே அந்த மாவட்ட ஊராட்சி வார்டுக்கான வாக்காளர் பட்டியல் ஆகும். நீங்கள் எந்த தேர்தலுக்கு போட்டியிட்டாலும் அத்தேர்தலுக்கு தொடர்புடைய ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும். ஒரு வாக்காளரின் பெயர் எந்த வார்டுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதோ அவ்வார்டு தொடர்புடைய தேர்தல்களில் வாக்களிக்க அவர் தகுதி பெற்றவர் ஆவார்.

## பகுதி – 2

# தகுதி மற்றும் தகுதியின்மை

நீங்கள் கிராம ஊராட்சி தலைவர் பதவியிடத்திற்கோ, உறுப்பினர் பதவியிடத்திற்கோ, ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கோ, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கோ போட்டியிடுவதற்கு கீழ்க்கண்ட (பத்தி 2.1.) தகுதிகளை பெற்றிருக்க வேண்டும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள (பத்தி 2.2.) தகுதியின்மை எதனையும் பெற்றிருக்க கூடாது.

### 2.1. தகுதி

(அ) நீங்கள் எந்த ஊராட்சி அமைப்பின் உறுப்பினராக அல்லது தலைவராக போட்டியிட விரும்புகின்றீர்களோ, அந்த ஊராட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும். உதாரணமாக, கிராம ஊராட்சி வார்டின் உறுப்பினர் பதவியிடத்திற்கு நீங்கள் போட்டியிட்டால், அந்த கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் எந்த ஒரு வார்டிலாவது இடம் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று நீங்கள் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கு போட்டியிட்டால், உங்கள் பெயர் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியத்தின் வாக்காளர் பட்டியலில் எந்த ஒரு வார்டிலாவது இடம் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று நீங்கள் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கு போட்டியிட்டால், உங்கள் பெயர் அந்த மாவட்ட ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் எந்த ஒரு வார்டிலாவது இடம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) வேட்பு மனு தாக்கல் செய்யும் கடைசி நாளன்று நீங்கள் 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

(இ) ஒதுக்கீடு செய்யப்பட்ட தலைவர் பதவியிடத்திற்கோ அல்லது உறுப்பினர் பதவியிடத்திற்கோ நீங்கள் போட்டியிட்டால் அந்த பதவியிடம் எந்த பிரிவினருக்கு (வகுப்பினர் அல்லது பெண்களுக்கு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த பிரிவினைச் சார்ந்தவராகவோ அல்லது அந்த வகுப்பினைச் சார்ந்தவராகவோ அல்லது அப்பிரிவின் பெண்ணாகவோ இருத்தல் வேண்டும். உதாரணமாக, ஒரு இடம் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் நீங்கள் ஆதி திராவிடர் வகுப்பினரைச் சேர்ந்தவராகவும், பெண்ணாகவும் இருக்க வேண்டும். அதே போன்று பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவ்வகுப்பைச் சேர்ந்த பெண்கள்தான் போட்டியிட இயலும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். பொது (பெண்கள்) என ஒதுக்கப்பட்ட இடத்தில் பெண்கள் (அனைத்து வகுப்பைச் சார்ந்த பெண்களும்) மட்டுமே போட்டியிடலாம்.

### 2.2. தகுதியின்மை

கிராம நிர்வாக அலுவலராகவோ அல்லது கிராமப் பணியாளராகவோ மற்றும் எந்த ஒரு ஊரக அல்லது நகர்ப்புற அல்லது தொழில் நகரங்கள் அல்லது பாளையம் (கண்டோன்மென்ட்) ஆகிய உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்த அலுவலராகவோ அல்லது பணியாளராகவோ அல்லது அரசு சார்புடைய நிறுவன பணியாளராகவோ அல்லது அலுவலராகவோ அல்லது மத்திய, மாநில அரசு அலுவலராகவோ அல்லது பணியாளராகவோ இருக்கக்கூடாது.

இந்திய அரசில் அல்லது ஏதேனும் மாநில அரசில் பதவி வகித்திருந்து லஞ்சம் அல்லது அரசுக்கு துரோகம் இழைத்ததற்காக பணியறவு (Dismissal) செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு போட்டியிட தகுதியற்றவர் ஆவார்.

1955–ம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் (Protection of Civil Rights Act, 1955) தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது.

மேலும், வேட்பு மனு தாக்கலுக்கான கடைசி நாளன்று 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 37 (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு சட்டங்களின் கீழ், ஒருவர்

நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அத்தகைய தண்டனை / தீர்ப்பு ஆனது –

(அ) அபராதம் மட்டுமிருப்பின் – குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு வருட காலத்திற்கு தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் ஆவார்.

(ஆ) அத்தகைய தீர்ப்பு சிறை தண்டனையாக இருப்பின், தீர்ப்பளிக்கப்பட்ட நாளிலிருந்தும் மற்றும் சிறைத் தண்டனை முடிந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு தொடர்ந்து தகுதியற்றவர் ஆவார்.

மேற்படி சட்டப்பிரிவு 37 (1)–ன்படி தெரிவிக்கப்பட்ட குற்ற செயல்களை தவிர வேறு ஏதேனும் குற்ற செயலுக்காக குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத சிறைத் தண்டனை அடைந்தவர், அவ்வாறு குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட நாளிலிருந்தும் மற்றும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு தகுதியற்றவர் ஆவார்.

மேலும், பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பதவியிடங்களில் அவ்வகுப்பைச்சாராதவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்படி சட்டப்பிரிவு 38 (3) (e)–ன் கீழ் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் அவ்வாறு தகுதி நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு போட்டியிடத் தகுதியற்றவர் ஆவார்.

மேலும்,

(அ) மனநலம் குன்றியவராக இருக்கக்கூடாது.

(ஆ) பெற்ற கடனை தீர்க்க வகையற்றவர் என மனு செய்துள்ளவராகவோ அல்லது உரிய நீதிமன்றத்தில் அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பவராகவோ இருக்கக் கூடாது.

(இ) நீங்கள் எந்த ஊராட்சி* யில் உறுப்பினராக அல்லது தலைவராகப் போட்டியிட விரும்புகிறீர்களோ அந்த ஊராட்சியுடன் மற்றும் எந்த ஒரு ஊராட்சியுடனும் எந்த ஒரு வேலைக்கான அல்லது பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்ததாரராக இருக்கக்கூடாது.

---

* ஊராட்சி என்பது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியினை குறிக்கும்.

(ஈ) ஊராட்சியின் சம்பளம் பெறும் சட்ட தொழில் ஆற்றுநராகவோ அல்லது ஊராட்சிக்கு எதிராக வழக்கு நடத்தும் சட்ட தொழில் ஆற்றுநராகவோ பணியமர்த்தப்பட்டிருக்கக் கூடாது.

(உ) முந்தைய ஆண்டு வரை ஊராட்சிக்கு கொடுக்க வேண்டிய எந்த வகையான நிலுவையும் வைத்திருக்கக் கூடாது.

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994—ன் எந்த ஒரு பிரிவின் கீழும் மற்றும் விதிகளின்படியும் தகுதி அற்றவராக நீங்கள் இருக்கக்கூடாது.

(எ) தேர்தல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கக் கூடாது.

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டதற்கான தேர்தல் செலவினக் கணக்குகளை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததால், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தலில் போட்டியிட மூன்று ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டிருப்பின், அத்தகைய தகுதி நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு போட்டியிடத் தகுதியற்றவர் ஆவார்.

மேற்கண்ட இனங்களுக்கு மாறாக தேர்தலில் போட்டியிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகிப்பது பின்னர் அறியவரின், அவர் மீது 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 41—ன்கீழ் தகுதி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 2.3. ஒன்றிற்கு மேற்பட்ட பதவியிடங்களில் போட்டியிட தடை

நீங்கள் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய நான்கு பதவியிடங்களில் ஏதேனும் ஒரு பதவியிடத்திற்கு மட்டுமே போட்டியிட முடியும். இவற்றில் ஒன்றிற்கும் மேற்பட்ட பதவியிடங்களுக்கு நீங்கள் வேட்பு மனு தாக்கல் செய்திருந்து, அவற்றில் ஏதேனும் ஒன்றை தவிர மற்றவற்றை குறித்த நாளுக்குள் திரும்பப் பெற வேண்டும். தவறும்பட்சத்தில் குலுக்கல் முறையில் ஏதேனும் ஒரு பதவியிடத்திற்கு மட்டும் நிர்ணயித்து மற்ற பதவியிடங்களுக்கான வேட்பு மனுக்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலரால் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பகுதி – **3**

# தேர்தல் அறிவிப்பு, தேர்தல் அட்டவணை மற்றும் வேட்புமனு தாக்கல்

**3.1.** (அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு தேர்தல் அட்டவணைப்படி தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கும். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவிக்கையின்படி, தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படும். அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு வேட்பு மனுக்கள் பெற நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரால் பெறப்படும்.

(ஆ) வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளுக்கு அடுத்த நாள் (பொது விடுமுறை நாளாக இருப்பின் அடுத்த வேலை நாள்) வேட்பு மனுக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இது குறித்து தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(இ) வேட்பாளர் விரும்பினால், ஆய்வு நாளுக்குப் பிறகு தேர்தல் அறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்ட நாளில் பிற்பகல் **3.00** மணிக்குள், வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அந்நேரத்தில், ஒரு நபரால் ஒன்றுக்கு மேற்பட்ட பதவியிடங்களுக்குச் செல்லத்தக்க வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தால் வருகை தந்துள்ள வேட்பாளர்கள் முன்னிலையில் குலுக்கல் முறையில் ஒரு பதவியிடத்திற்கான வேட்பு மனு மட்டும் ஏற்றுக் கொள்ள முடிவு மேற்கொள்ளப்படும்.

(ஈ) பதவி இடம் ஒன்றிற்கு ஒரு நபர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்து அந்த வேட்பு மனு செல்லத்தக்க வேட்பு மனுவாக ஏற்றுக் கொள்ளப்படும் நேர்வில், அந்நபர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுவார். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரு இடத்திற்குப் போட்டியிட்டால் அவர்களில் ஒருவரை வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக வாக்குப் பதிவு நடைபெறும். வாக்குப் பதிவு, தேர்தல் அறிவிக்கையில் குறிப்பிட்டபடி குறித்த நாளில் நடைபெறும்.

**3.2. வேட்பு மனு தாக்கல்**

இக்கையேட்டில் 'வேட்புமனு' எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 1995ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் உள்ள படிவம் 3 மற்றும் படிவம் 3–A ஆகியவற்றை கொண்டதாகும். மேற்படி விதிகளின் விதி 26 (2–A) (g)–ன்படி படிவம் 3–A என்பது (தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பாக வேட்பாளர் வேட்பு மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்ய வேண்டிய உறுதிமொழி ஆவணம் / சாற்றுரை), படிவம் 3–ன் (வேட்பு மனு) ஒரு பகுதியாகும்.

மேற்படி தேர்தல் விதிகளின் விதி 26 (2–A) (d)-ன்படி, ஒரு வேட்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நேர்வில் படிவம் 3–A (உறுதிமொழி ஆவணம் / சாற்றுரை)–யினை முதல் வேட்பு மனுவுடன் தாக்கல் செய்தால் போதுமானது.

மேற்படி விதிகளின் விதி 26 (2–A) (b)–ன்படி, இந்த உறுதிமொழி ஆவணம் (படிவம் 3 –A)–யினை ரூ.20/– க்கான முத்திரைத் தாளில் தயாரிக்கப்பட்டு, உறுதிமொழி ஆணையர் அல்லது முதல் நிலை குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (நோட்டரி பப்ளிக்) முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பாக சாற்றுரை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்படி விதிகளின் விதி 26 (2–A) (c)–ன்படி, இந்த உறுதிமொழி ஆவணம்/சாற்றுரையினை வேட்புமனுவுடன் தாக்கல் செய்யாத வேட்பாளரின் வேட்பு மனு, தேர்தல் விதி மீறலாக கருதி வேட்புமனு பரிசீலனையின்போது தேர்தல் நடத்தும் அலுவலரால் தள்ளுபடி செய்யப்படும்.

மேலும், மேற்படி உறுதிமொழி ஆவணம்/ சாற்றுரையில் (படிவம் 3 –A)–ல் உள்ள விவரங்களை நீதிமன்ற ஆணையின்படி இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக வேட்பாளர்களின் தகவல்கள் குறித்த சுருக்கம் இக்கையேட்டின் இணைப்பில் தரப்பட்டுள்ளது. அதில் கோரப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து வேட்புமனுவுடன் இணைத்து வேட்புமனு தாக்கலின்போது தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

(அ) நீங்கள் தேர்தல் அறிவிக்கையில் குறிப்பிட்ட நாட்களில் (பொது விடுமுறை நாட்களைத் தவிர) எந்த ஒரு நாளிலும் வேட்பு மனு தாக்கல் செய்யலாம்.

(ஆ) வேட்பு மனு உரிய படிவத்தில் இருக்க வேண்டும். இதற்கான படிவங்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் கிடைக்கும். அச்சிட்ட படிவம் கிடைக்கப் பெறாத நிலையில் குறிப்பிட்ட படிவத்தினைக் கையால் எழுதியோ, தட்டச்சு செய்தோ வேட்பு மனு தயாரித்து, தாக்கல் செய்யலாம்.

(இ) உங்களது பெயரை யார் முன்மொழிகிறாரோ அவரது பெயர், நீங்கள் போட்டியிடும் ஊராட்சி வார்டின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். கிராம ஊராட்சியின் தலைவர் பதவிக்கு உங்கள் பெயரை முன்மொழிபவரின் பெயர் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) நீங்கள் ஒரு பதவியிடத்திற்கு நான்கு வேட்பு மனுக்கள் வரை தாக்கல் செய்யலாம்.

(உ) ஒவ்வொரு வேட்பு மனுவிலும் அத்தேர்தலில் போட்டியிட உங்களது விருப்பத்தைத் தெரிவிக்கும் வகையில் உரிய இடத்தில் நீங்கள் ஒப்பமிட வேண்டும்.

(ஊ) வேட்பு மனுவில் உங்களது வயதைக் குறிப்பிடத் தவற வேண்டாம். ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு பதவியிடத்திற்கு போட்டியிட நீங்கள் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தால் வேட்பு மனுவில் நீங்கள் எந்த வகுப்பினருக்காக அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த வகுப்பைச் சார்ந்தவர் என்பதற்கான உறுதிமொழி தெரிவித்து ஒப்பமிட வேண்டும்.

(எ) கட்சி அடிப்படையிலானத் தேர்தலில் நீங்கள் ஒரு அரசியல் கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளராக இருந்தால், வேட்பு மனுவுடன் கூடிய ''C'' படிவத்தில் எந்த கட்சியின் சார்பாக நீங்கள் போட்டியிடுகிறீர்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடத் தவறினால் நீங்கள் சுயேட்சையாகவே கருதப்படுவீர்கள்.

(ஏ) நீங்கள் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளராகவோ அல்லது சுயேட்சை வேட்பாளராகவோ இருந்தால், அத்தேர்தலுக்கென அறிவிக்கப்பட்ட சின்னங்களில் மூன்று சின்னங்களை உங்கள் விருப்பத்திற்கிணங்க வரிசைப்படுத்தி கோரலாம். உங்களால் தாக்கல் செய்யப்படும் முதல் வேட்பு மனுவில் குறிப்பிடப்படும் சின்னங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

(ஐ) வேட்பு மனு தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையை ரொக்கமாக செலுத்தியோ அல்லது ஊராட்சி ஒன்றியக் கருவூலத்தில் செலுத்தி பெறப்பட்ட செலுத்துச் சீட்டுடனோ வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வைப்புத் தொகையில் சலுகை உண்டு. கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தவிர்த்த ஏனைய வேட்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| அ. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 200 |
| ஆ. | கிராம ஊராட்சி தலைவர் தேர்தல் | ரூ. 600 |
| இ. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 600 |
| ஈ. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 1000 |

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| அ. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 100 |
| ஆ. | கிராம ஊராட்சி தலைவர் தேர்தல் | ரூ. 300 |
| இ. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 300 |
| ஈ. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | ரூ. 500 |

(ஒ) நீங்கள் ஒரு பதவியிடத்திற்கு எத்தனை வேட்பு மனு தாக்கல் செய்தாலும் ஒரே ஒரு வைப்புத் தொகை மட்டும் செலுத்தினால் போதுமானது.

(ஓ) முதன்முதலாக தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவுடன் அசல் செலுத்துச் சீட்டை இணைத்தும். அதன் பின்பு தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவுடன் செலுத்துச் சீட்டின் நகலை இணைத்தும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்.

(ஔ) வேட்பு மனுவை நீங்களோ அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரோ சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம், நேரடியாக, குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். வேட்பு மனுவில் முன்மொழிபவரும் நீங்களும் ஒப்பமிட்டிருக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட கடைசி நாளுக்குப் பின்பும், குறித்த நேரத்திற்குப் பின்பும் வேட்பு மனுக்கள் பெறப்படமாட்டா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(க) வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும்போது நீங்களோ அல்லது உங்கள் வேட்பு மனுவை முன்மொழிபவரோ, தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ள எல்லா விவரங்களையும், குறிப்பாக முன்மொழிபவர் பெயரும் உங்கள் பெயரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர் எண், பாகம் எண், வார்டு எண், கிராம ஊராட்சியின் பெயர், ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் ஆகியவை சரியாக உள்ளதா என்பதையும், அவை வாக்காளர் பட்டியலில் கண்ட விவரங்களுடன் ஒத்திருக்கிறதா என்பதையும் தேர்தல் நடத்தும் அலுவலர் சரிபார்த்து திருப்திபடுத்திக் கொள்ள உதவி செய்ய வேண்டும்.

(கா) தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில் அடித்தல், திருத்தல் மற்றும் பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வேட்பு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுக்கும் வாக்காளர் பட்டியலில் உள்ள விபரங்களுக்கும் அச்சுப்பிழை காரணமாகவோ எழுத்துப் பிழை காரணமாகவோ ஏதேனும் வேறுபாடு காணப்பட்டாலும், அவைகளில் சில சந்தேகங்கள் இருந்தாலும் அவற்றை தேர்தல் நடத்தும் அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்படும். இருந்த போதிலும் நீங்கள் சிறப்பு கவனம் செலுத்தி வேட்பு மனுவை முறையாக தயாரித்து தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் சமயம் உங்களது வேட்பு மனுவின் தொடர் எண், தாக்கல் செய்யும் நேரம், நாள், வேட்பு மனு பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளும் நேரம், நாள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து ஒரு ஒப்புதல் ரசீதினை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## பகுதி – 4

## ஆய்வு செய்தல்

**4.1.** வேட்பு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாளன்று, குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உங்களது வேட்பு மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார். அவர் இப்பணியைக் கிட்டத்தட்ட ஒரு நீதிபதியின் பொறுப்பிலிருந்து செய்வார். அச்சமயம் அவர் கோரும் ஒத்துழைப்பை நீங்கள் நல்கி உதவ வேண்டும். பரிசீலனை பொதுவாக தேர்தல் நடத்தும் அலுவலரால் மட்டுமே செய்யப்படும். தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் தேர்தல் நடத்தும் அலுவலர் இப்பணியைச் செய்யக் கோரி உதவி தேர்தல் நடத்தும் அலுவலரை எழுத்து மூலமாக உத்தரவிட்டால், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் இப்பணிக்காக தேர்தல் நடத்தும் அலுவலராக செயல்படுவார். மேற்படி பரிசீலனையின்போது நீங்களோ அல்லது உங்களை முன்மொழிந்தவரோ அல்லது நீங்கள் அங்கீகரித்தவரோ அல்லது இந்த மூவருமோ தேர்தல் நடத்தும் அலுவலரின் பரிசீலனை

நடவடிக்கைகளைக் கவனிக்கலாம். தேர்தல் நடத்தும் அலுவலர், ஒவ்வொரு வேட்பு மனுவாக பரிசீலனை செய்யும் பொழுது, அந்த வேட்பு மனு குறித்து நீங்கள் ஏதாவது மறுப்பு தெரிவிக்க வேண்டியிருந்தால், அதனை எழுத்து மூலமாக தெரிவிப்பதுடன், அம்மறுப்பை உறுதிப்படுத்த, ஆவணங்களையும் தேர்தல் நடத்தும் அலுவலர் குறிப்பிடும் நேரத்திற்கு முன் அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். உங்கள் வேட்பு மனு குறித்த சக வேட்பாளர்கள் அல்லது அவரது சார்பாக முன்மொழிந்தவர் அல்லது அங்கீகரிக்கப்பட்டவர் ஆட்சேபணைகள் அல்லது மறுப்புரைகள் தாக்கல் செய்தால், அந்த ஆட்சேபணைகளை அல்லது மறுப்புரைகளை முறியடிக்கத் தகுந்த ஆதாரங்களை ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அலுவலர் நிர்ணயிக்கும் காலத்திற்குள் நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும். ஒரு வேட்பு மனு குறித்த மறுப்புரைகள் ஏற்கப்படின், தேர்தல் நடத்தும் அலுவலர், அந்த வேட்பு மனுவை நிராகரித்து உத்தரவிடுவார். அவ்வாறு அவர் உத்தரவிடும் சமயம், எழுத்து மூலமாக அதற்கான காரணங்களை அவர் உங்களுக்கு தெரிவிப்பார். அவரது ஆணையே இறுதியானதாகும். வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால் உங்களால் தேர்தலில் போட்டியிட இயலாது. இது குறித்து பின்னர் நிர்ணயிக்கப்பட்ட உரிய நீதிமன்றத்தின் முன்பு தான் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்புதான் தேர்தல் வழக்கு தொடர இயலும். எனவே, வேட்பு மனு பரிசீலனை செய்யப்படும் சமயம் விழிப்புடன் இருந்து உங்களது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படாமல் கவனித்துக் கொள்வது உங்களது பொறுப்பாகும்.

**4.2. வேட்பு மனு கீழ்க்கண்ட காரணங்களுக்காக நிராகரிக்கப்படலாம்.**

(அ) வேட்பு மனு பரிசீலனையின்போது, நீங்கள் உரிய தகுதியைப் பெறாமல் இருந்தால் அல்லது தகுதியின்மை வரிசையில் உங்கள் பெயர் இருந்தால்;

(ஆ) நீங்களோ அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரோ அன்றி ஏனைய நபர்கள் யாரேனும் ஏனைய முறைகளில் உங்களது வேட்பு மனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தால்;

(இ) தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலரைத் தவிர்த்து ஏனைய நபர்களிடம் நீங்களோ அல்லது முன்மொழிபவரோ உங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தால்;

(உ) வேட்பு மனு குறிப்பிட்ட படிவத்தில் இல்லாதிருந்தால்;

(ஊ) வேட்பு மனு முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல்இருந்தால்;

(எ) வேட்பு மனுவில் நீங்களோ அல்லது உங்கள் பெயரை முன்மொழிபவரோ ஒப்பமிடத் தவறியிருந்தால்;

(ஏ) வேட்பு மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டிய உறுதிமொழியை (Affidavits) ஒப்பமிட்டு இணைக்கத் தவறியிருந்தால்;

(ஐ) வேட்பு மனுவுடன் உரிய வைப்புத் தொகை செலுத்தாதிருந்தால் அல்லது குறைவாகச் செலுத்தியிருந்தால்;

(ஒ) வேட்பு மனுவில் காணும் உங்கள் கையொப்பத்திற்கும் ஏனைய ஆவணங்களில் உள்ள உங்கள் கையொப்பத்திற்கும் வேறுபாடு காணப்பட்டால்;

(ஓ) இட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு போதிய தகுதியின்றி வேட்பு மனு தாக்கல் செய்திருந்தால்;

(ஔ) உங்கள் பெயரை முன்மொழிபவர் நீங்கள் எந்த வார்டில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளீர்களோ அந்த வார்டின் வாக்காளராக இல்லாமலிருந்தால்;

**4.3.** வேட்பு மனு பரிசீலனையின்போது உங்களது வேட்பு மனுக்கள் மீது எழுப்பப்படும் மறுப்புரைகள் அல்லது ஆட்சேபணைகள் குறித்து உங்கள் நிலைமையை ஆதாரத்துடன் நிரூபிப்பதற்கு நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களையும் உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

(அ) உங்கள் பெயர் மற்றும் உங்களை முன்மொழிபவரின் பெயர் இடம் பெற்றுள்ள வாக்காளர் பட்டியலின் அங்கீகரிக்கப்பட்ட நகல் அல்லது இது குறித்த சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரின் சான்று;

(ஆ) வயது மற்றும் இதர விவரங்களை நிரூபிப்பதற்குத் தேவையான சான்றுகள், ஆவணங்கள் (Documents) ;

(இ) வைப்புத் தொகை செலுத்தியதற்கான ரசீது (நகல்);

(ஈ) தேர்தல் நடத்தும் அலுவலரால் உங்களுக்கு வழங்கப்பட்ட பரிசீலனை நாள் குறித்த அறிவிப்பு மற்றும் உங்களது வேட்பு மனு பெறப்பட்டமைக்கான ஒப்புதல்;

வேட்பு மனு பரிசீலனை முடிந்தவுடன் தேர்தல் நடத்தும் அலுவலர் அனைத்து வேட்பு மனுக்கள் குறித்தும் எடுக்கப்பட்ட முடிவினை இறுதியாக்கி, முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிடுவார். அப்பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதையும் உங்கள் பெயர் எவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## பகுதி – 5

## வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல்

வேட்புமனு பரிசீலனையில், உங்களது வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதுபோல் உங்களது பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும். இந்நிலையில் நீங்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக வேட்பு மனுவைத் திரும்பப் பெற விரும்பினால், வேட்புமனு திரும்பப் பெற நிர்ணயிக்கப்பட்ட நாளன்று பிற்பகல் **3.00** மணிக்குள் நீங்கள் நேரடியாகவோ அல்லது உங்கள் வேட்பு மனுவை முன்மொழிந்த நபர் மூலமாகவோ அதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்பமிட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்யலாம். அவ்வாறு நீங்கள் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றால், வேட்புமனுவை திரும்பப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். வேட்பு மனுவைத் திரும்பப் பெற்ற பின், எந்த நிலையிலும் நீங்கள் திரும்பப் பெற்ற அறிவிப்பை ரத்து செய்ய இயலாது. தேர்தலில் போட்டியிடவும் இயலாது. எனவே, இது குறித்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். வேட்பு மனுவைத் திரும்பப் பெற நீங்கள் தாக்கல் செய்த அறிவிப்பினைப் பெற்றுக் கொண்டமைக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அளிக்கும் ஒப்புதலின் பேரில்தான் நீங்கள் உங்களது வைப்புத் தொகையைத் திரும்பப்பெற இயலும் என்பதால் இவ்வொப்புதலைப் பெற தவறக் கூடாது. வேட்பு மனு திரும்பப்பெற நிர்ணயிக்கப்பட்ட நாளன்று பிற்பகல் **3.00** மணிக்கு மேல் தேர்தல் நடத்தும் அலுவலர் யார் யாரெல்லாம் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெற அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்று ஒரு அறிவிப்பையும் தன் அலுவலக அறிவிப்புப்பலகையில் வெளியிடுவார். இவ்வறிவிப்பிற்குப் பிறகு வெளியிடப்படும் இறுதி வேட்பாளர் பட்டியலில் இடம் பெறும் நபர்களுக்கு மட்டுமே சின்னங்கள் உரிய விதிகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டியலில் பிரசுரிக்கப்படும்.

### பகுதி – 6

## சின்னங்கள் ஒதுக்கிடுதல்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலுக்கான சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணை, **2016**–ன்படி ஊராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**6.1. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கிடும் முறை –**

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மட்டுமே நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஒதுக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கான சின்னங்கள் வேறு எவருக்கும் ஒதுக்கப்பட மாட்டாது.

(ஆ) பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணைகளின்படி சின்னங்கள் ஒதுக்கீட்டில் சுயேட்சை வேட்பாளர்களை காட்டிலும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதால் அக்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்படும் ஒவ்வொரு வேட்பாளரும், தன்னால் அல்லது தன்பொருட்டு முதலில் தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில், சுயேட்சை சின்னங்களின் பட்டியலில் இருந்து, தான் தேர்வு செய்யும் மூன்று சின்னங்களை, தான் விரும்பும் வரிசைப்படி குறிப்பிட வேண்டும்.

வேட்பாளர் முதலில் கோரிய சின்னம் முதலாவதாகவும், இரண்டாவதாக கோரிய சின்னம் இரண்டாவதாகவும், மூன்றாவது கோரிக்கை கடைசி கோரிக்கையாகவும் பரிசீலிக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர் ஒரே ஒருவரால் மட்டும் அவரது முதல் தேர்வாக ஒரு சுயேட்சை சின்னம் கோரப்பட்டால், அந்த சின்னம் அவருக்கு மட்டுமேயல்லாது பிறருக்கு ஒதுக்கப்படமாட்டாது. ஒரு சுயேட்சை சின்னம் ஒன்றுக்கு மேற்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்களால் கோரப்பட்டால், அந்த சின்னம், குலுக்கல் முறையில், முதலில் யார் பெயர் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர் ஒருவர் கோரிய முதல் விருப்ப சின்னம், குலுக்கல் முறை மூலம் அவருக்கு ஒதுக்கீடு செய்ய இயலாது போனால், அவர் கோரிய இரண்டாவது விருப்ப சுயேட்சை சின்னத்தை அவருக்கு ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்படும். முரண்பட்ட கோரிக்கைகளினாலும், குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட இயலாத பட்சத்திலும், இரண்டாவது விருப்ப சின்னமும் அவ்வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்ய முடியாமற்போனால், அவரது

மூன்றாவது விருப்ப சின்னத்தை ஒதுக்கிட பரிசீலிக்கப்படும். அவ்வாறு மூன்றாவது விருப்ப சின்னத்தையும் ஒதுக்கிட இயலாமற்போனால், மேற்சொன்ன முறையில் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் பிற வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தது போக மீதமுள்ள சுயேட்சை சின்னங்களில் ஒன்று அவ்வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**(இ)** ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரும், பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் தனது வேட்பு மனுவுடன் கட்சி சார்பில் நிறுத்தப்படுவதற்கான படிவம் ''C'' யிலான உறுதிமொழியை இணைத்திருக்க வேண்டும். வேட்பு மனுவை திரும்பப்பெறும் நாளன்று பிற்பகல் **3.00** மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம், தான் கட்சி சார்பில் நிறுத்தப்படுபவர் என்பதற்கான அக்கட்சியின் அத்தாட்சிப் பெற்றவரின் எழுத்து மூலமான அறிவிப்பை, படிவம் ''B''–ல் அவர் அளிக்க வேண்டும்.

மேற்படி அறிவிப்பினை அறிவிப்பு செய்ய அதிகாரம் பெற்ற தலைவர் அல்லது செயலாளர் அல்லது மற்றொரு நிர்வாகி அல்லது அத்தகைய நிர்வாகியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு நபரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். படிவம் ''B''–னை அளிக்க அதிகாரம்/அத்தாட்சி பெற்ற நபரின் பெயர் மற்றும் மாதிரி கையொப்பம் ஆகிய தகவல்கள் அடங்கிய படிவம் ''A'' நிரப்பப்பட்டு வேட்பு மனு திரும்பப்பெறும் நாளன்று பிற்பகல் **3.00** மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். படிவம் ''A'' தொடர்புடைய கட்சியால் அவ்வறிவிப்பினை செய்ய அதிகாரம் பெற்ற தலைவர் அல்லது செயலாளர் அல்லது மற்றொரு நிர்வாகியினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும் மேற்படி நிர்வாகியினால் நேரடியாக படிவம் ''B'' –ல் கையொப்பமிட்டு வழங்கப்படும் நேர்வுகளில், படிவம் ''A'' –ல் வழங்க வலியுறுத்த வேண்டியதில்லை. ஒரு அரசியல் கட்சி, ஆரம்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதித்திருந்தால், இறுதியில் ஒரே ஒரு வேட்பாளரை மட்டும் தான் அக்கட்சியின் அங்கீகாரம் பெற்ற வேட்பாளராக அறிவித்து பிற வேட்பாளர்களது மனுக்கள் திரும்பப் பெறப்பட வேண்டும். அவ்வாறன்றி தவறுதலாகவோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ மேற்கூறியவாறு செய்யப்படவில்லையெனில், அக்கட்சியின் சார்பாக வேட்பு மனு தாக்கல் செய்த எவரும் கோரப்பட்ட சின்னத்தை பெறத் தகுதியற்றவர் எனக் கருதப்பட்டு, சுயேட்சை சின்னங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் ஒதுக்கப்படும்.

**6.2. சுயேட்சை வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கிடும் முறை**

பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்கள் கோரும் சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னரே, சுயேட்சை வேட்பாளர்களுக்கு மீதமுள்ள சின்னங்களிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒவ்வொரு சுயேட்சை வேட்பாளரும், தன்னால் அல்லது தன்பொருட்டு முதலில் தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவில், சுயேட்சை சின்னங்களின் பட்டியலில் இருந்து, தான் தேர்வு செய்யும் மூன்று சின்னங்களை, தான் விரும்பும் வரிசைப்படி குறிப்பிட வேண்டும். சின்னங்கள் கீழ்க்கண்ட முறைப்படி ஒதுக்கீடு செய்யப்படும்.

வேட்பாளர் கோரிய வரிசைப்படி சின்னம் ஒதுக்கீடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படும். அதாவது, வேட்பாளர் முதலில் கோரிய சின்னம் முதலாவதாகவும், இரண்டாவதாக கோரிய சின்னம் இரண்டாவதாகவும், மூன்றாவது கோரிக்கை கடைசி கோரிக்கையாகவும் பரிசீலிக்கப்படும்.

சுயேட்சை வேட்பாளர்களுக்கு அவர்களது விருப்பத்தின் முன்னுரிமை அடிப்படையில்தான், சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சுயேட்சை வேட்பாளர்கள் முன்னுரிமை அடிப்படையில் ஒரே சின்னத்தை கோரியிருந்தால், அது குலுக்கல் முறையில் தீர்மானிக்கப்படும். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும்போது, ஒரு வேட்பாளருக்கு அவர் கோரியிருந்த எந்த ஒரு சின்னத்தையும் அளிக்க இயலாத நிலை ஏற்படுமானால், தேர்தல் நடத்தும் அலுவலர், பிற வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்த பின் எஞ்சியுள்ள சின்னங்களிலிருந்து குலுக்கல் முறையில் ஒரு சின்னத்தை தேர்ந்தெடுத்து அந்த வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்வார்.

**6.3. கட்சி அடிப்படையில் அல்லாமல் நடைபெறும் தேர்தல்களில் சின்னங்கள் ஒதுக்கிடும் முறை**

கட்சி அடிப்படையில் அல்லாமல் நடைபெறும் தேர்தல்களில், அத்தேர்தல்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட சுயேட்சை சின்னங்களிலிருந்து வரிசைக்கிரமமாக குலுக்கல் முறையில் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் வழங்கப்படும். வேட்பு மனுக்களை திரும்பப்பெறும் காலக்கெடு முடிந்த பின், தேர்தல் நடத்தும் அலுவலர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை தமிழ் அகர வரிசைப்படி எழுதி, ஒரு அட்டவணை தயார் செய்வார். அவ்வட்டவணையில் இடம்பெற்றுள்ள பெயர்களை தனித்தனி சீட்டுகளில் எழுதி குலுக்கிப்

போட்டு, அவற்றில் ஒன்றை எடுத்து அவ்வாறு எடுக்கப்பட்ட சீட்டில் இடம்பெற்றுள்ள பெயர் கொண்ட வேட்பாளருக்கு அத்தேர்தலுக்கான சின்னங்களின் பட்டியலில் உள்ள முதல் சின்னத்தை ஒதுக்கீடு செய்வார். அதன் பின்னர் எஞ்சியிருக்கும் சீட்டுகளை குலுக்கி போட்டு, அவற்றில் ஒன்றை எடுத்து அச்சீட்டில் இடம் பெற்றுள்ள வேட்பாளருக்கு சின்னங்கள் பட்டியலில் உள்ள இரண்டாவது சின்னத்தை ஒதுக்கீடு செய்வார். இவ்வாறாக எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்களோ, அதற்கேற்ப சீட்டுகளைக் குலுக்கி போட்டு எடுத்து வரிசைக் கிரமமாக பட்டியலில் கண்ட சின்னங்களை வேட்பாளர்களுக்கு அளிப்பார். இவ்வாறு சின்னங்கள் ஒதுக்கீடு செய்த பின், தேர்தல் நடத்தும் அலுவலர் எந்த எந்த வேட்பாளர்களுக்கு எந்த எந்த சின்னங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அந்த சமயத்தில் வருகை தந்துள்ள வேட்பாளர்களுக்கு அறிவித்து, அவர்களது ஒப்பத்தை சின்னம் ஒதுக்கீடு செய்யும் பட்டியலில் பெற்றுக் கொள்வார். மேலும் அவரவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னத்தின் மாதிரி வடிவ வரைபடத்தையும் அவர்களுக்கு வழங்குவார்.

## பகுதி – 7

## தேர்தல் முகவர் (ELECTION AGENT)

இறுதி பட்டியலில் இடம் பெற்ற வேட்பாளர்கள் தங்களுக்கென ஒரு தேர்தல் முகவரை உரிய படிவத்தில் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு விண்ணப்பித்து நியமித்து கொள்ளலாம். ஆனால் இது கட்டாயமான ஒன்றல்ல. வேட்பாளர் விரும்பினால் வேட்பாளரது தேர்தல் பணிகளுக்காக விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட எந்த ஒரு பணியையும் தேர்தல் முகவர் ஆற்றலாம். இதற்கென உரிய படிவத்தை இரண்டு நகல்களில் பூர்த்தி செய்து ஒப்பமிட்டு, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பினால், அத்தகைய படிவம் ஏற்றுக் கொள்ளப்படின் தேர்தல் நடத்தும் அலுவலர் இரண்டு நகல்களில் ஒன்றை ஒப்பமிட்டு வேட்பாளருக்கு திரும்ப அனுப்புவார். தேர்தல் நடத்தும் அலுவலர் ஒப்பமிட்ட இந்த நகலை தேர்தல் முகவர் எப்பொழுதும் தன் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

பகுதி – 8

# வேட்பாளர்கள் தேர்தல் காலத்தில் செய்ய வேண்டியவை மற்றும் செய்ய வேண்டாதவை பற்றிய குறிப்பு

1) ஊராட்சிகள் தேர்தல் குறித்த சட்டங்கள், விதிமுறைகள், செயல்கள், நடைமுறைகள் மற்றும் அறிவுரைகள் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

2) எந்த ஊராட்சிக்கு/வார்டிற்குப் போட்டியிடுகின்றீர்களோ அந்த ஊராட்சியின்/வார்டின் முழுமையான வாக்காளர் பட்டியலை கைவசம் வைத்திருக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடம் விலைக்கு கிடைக்கும்.

3) உங்கள் பெயர் மற்றும் விவரங்கள், வாக்காளர் பட்டியலில் முறையாக வெளியிடப்பட்டுள்ளதா என்பதை தேர்தலில் போட்டியிட விழைவதற்கு முன்பாகவே சரிபார்த்து கொள்ள வேண்டும்.

4) தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் பற்றி சரியாக அறிந்து கொண்டு, குறிப்பிட்ட தகுதிகள் உங்களுக்கு முழுமையாக உள்ளனவா என்பதையும் தகுதியின்மைகள் எதுவும் உங்களுக்கு இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டு வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டும். தகுதியற்றவராக இருந்தால் வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதி நாளுக்கு முன்பாக உங்களை தகுதி உள்ளவராக ஆக்கி கொண்ட பின்னர் வேட்பு மனு தாக்கல் செய்யலாம்.

5) வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு உரிய படிவத்தை முன்கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்யவும் வேண்டும். உரிய இடங்களில் ஒப்பமிடவும் வேண்டும். உறுதிமொழியும் அளிக்க வேண்டும்.

6) வேட்பு மனுவை நீங்களே நேரடியாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் குறித்த நாளில் குறித்த நேரத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். இயலாவிடின் மேற்படி காலத்தில் உங்கள் பெயரை முன்மொழிபவர் மூலம் தாக்கல் செய்ய வேண்டும்.

7) நீங்கள் எந்த வார்டிற்கு வேட்பு மனு தாக்கல் செய்கிறீர்களோ அந்த வார்டுக்கான வாக்காளர் பட்டியலில் உங்களை முன்மொழிபவரின் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதை

உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். ஊராட்சித் தலைவர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்கையில், உங்களை முன்மொழிபவர் அந்த ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

8) ஒரு பதவிக்கு ஒரு வேட்பு மனுவுக்கு மேல் தாக்கல் செய்ய நீங்கள் விரும்பினால், நான்கு வேட்பு மனுக்கள் வரை வெவ்வேறு முன்மொழிபவர்கள் மூலம் தாக்கல் செய்யலாம்.

9) பொதுவாக வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மட்டுமே தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட இடத்தில் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

10) நீங்கள் ஏதாவது ஒரு வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கோ அல்லது ஊராட்சித் தலைவர் பதவியிடத்திற்கோ என மொத்தத்தில் ஒரே ஒரு பதவிக்கு மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும். அது தவிர ஏனைய தேர்தல்களுக்கு நீங்கள் வேட்புமனு தாக்கல் செய்யக்கூடாது.

11) வேட்புமனுவுடன் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத்தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும் அல்லது ஊராட்சி ஒன்றிய கருவூலத்தில் செலுத்தியதற்கான செலுத்துச்சீட்டு இணைக்க வேண்டும்.

12) வேட்புமனு தாக்கல் செய்ததற்கான ஒப்புதல் மற்றும் வேட்புமனு பரிசீலனைக்கான அறிவிப்பினை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13) வேட்புமனு பரிசீலனை நாளன்று கண்டிப்பாக குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் வேட்புமனு பரிசீலனையில் கலந்து கொள்ள வேண்டும். பரிசீலனை முடிந்த பின், உங்கள் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பதையும் செல்லத்தக்க வேட்புமனுக்களின் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதையும் சரி பார்க்க வேண்டும்.

14) கட்சி சார்புடைய தேர்தலாகவும், ஏதாவது ஒரு கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளராகவும் இருப்பின், சின்னம் ஒதுக்கப்படுவது சம்பந்தமாக நீங்கள் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தாக்கல் செய்ய வேண்டிய படிவங்கள் A மற்றும் B ஆகியவற்றை குறித்த காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், நீங்கள் கோரிய சின்னம் உங்களுக்கு கிடைக்காமல் போகும்.

15) வாக்குப்பதிவு நாள் குறித்த அறிவிப்பையும் வாக்குப்பதிவு நேரம் குறித்த அறிவிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

16) தேர்தல் முகவரை நியமித்துக் கொள்ள முறைப்படி உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

17) வாக்குச்சாவடிகளின் பட்டியலின் நகல் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

18) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தேர்தல் முகவர் ஒருவரை நீங்கள் நியமிக்கலாம். இது உரிய படிவத்தில் இருக்க வேண்டும்.

19) தேர்தல் முகவர்களுக்கு வசதியாக அவரவர் பணியாற்றும் வாக்குச்சாவடிக்கு உரிய வாக்காளர் பட்டியலின் நகல் ஒன்றை அளிக்க வேண்டும்.

20) வாக்காளர்களுக்கு அடையாள சீட்டு விரும்பினால் உங்கள் பெயரையும் சின்னத்தையும் குறிப்பிடாமல் வெள்ளைத்தாளில் வாக்காளர் குறித்த விவரங்களை மட்டும் எழுதி, வேண்டுகோள், கோரிக்கை எதுவுமின்றி அனுப்ப வேண்டும்.

21) நீங்கள் விரும்பினால், வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் பணிக்கு, போதிய அளவில் வாக்கு எண்ணும் ஒரு மேசைக்கு ஒருவர் வீதம் முகவர்களை நியமிக்கலாம்.

22) வாக்கு எண்ணும் பணியை நீங்களும் நேரடியாக கண்காணிக்கலாம்.

23) வாக்காளர்களுக்கு பரிசுப்பொருட்களோ, உறுதிமொழிகளோ, முறையீடுகளோ, அச்சுறுத்தல்களோ இன்றி வாக்கு சேகரிக்கும் பணியைச் செய்ய வேண்டும்.

24) ஒருவரைத் தேர்தலில் போட்டியிடுவதினின்று தவிர்க்கவோ அல்லது போட்டியிட செய்யவோ முறையற்ற வழிகளை கையாளக் கூடாது. வாக்காளர் எவரையும் வாக்களிக்க செய்வதற்காக அல்லது வாக்கு அளிப்பதினின்றும் தடுப்பதற்காக எந்த ஒரு முறையற்ற செயலையும் செய்யக்கூடாது. சகவேட்பாளர் எவரையும் தேர்தலில் போட்டியிடுவதினின்றும் தவிர்ப்பதற்காக வேட்புமனுவை திரும்பப் பெற நிர்ப்பந்திக்க கூடாது. இதற்காக முறையற்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

25) நியாயமாக, அமைதியாக தேர்தல்கள் நடைபெறுவதற்கு உதவ வேண்டும்.

26) நேர்மையற்ற வழிகளிலும், முறையற்ற செயல்களிலும் ஈடுபட்டு, அமைதியாக நடக்கும் தேர்தல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊறுவிளைவிக்கக்கூடாது.

27) வாக்காளர்களின் மத, இன, சாதி மற்றும் மொழி உணர்வுகளைத் தூண்டி வாக்களிக்கச் செய்யவோ, அல்லது வாக்களிப்பதைத் தடுக்கவோ முயல்வது கூடாது.

28) சமய உணர்வுகளைத் தூண்டியோ அல்லது சமய சின்னங்களைப் பயன்படுத்தியோ வாக்கு சேகரிக்கவோ, வேண்டுகோள் விடுக்கவோ கூடாது.

29) வாக்காளர்கள் மத்தியில் மத, இன, சாதி, வகுப்பு, மொழி போன்ற பாகுபாடுகளின் அடிப்படையில் விரோதத்தையும், வெறுப்பையும் வளர்த்து அதன் மூலமாக வாக்குகள் பெறும் முயற்சியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாது.

30) சகவேட்பாளர்களின் சொந்த விவரங்கள் மற்றும் அவர்களது நடத்தை குறித்து பிரச்சாரம் எதுவும் மேற்கொள்வது கூடாது.

31) வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு கொண்டு செல்ல வாகனங்கள் எவற்றையும் வாடகைக்கு அமர்த்தவோ அல்லது அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவோ கூடாது.

32) ஒவ்வொரு தேர்தலுக்கெனவும் நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் செலவினங்களுக்கு மேல் செலவு செய்யக்கூடாது. தேர்தல்களுக்கு செலவழிக்கப்படும் தொகைக்கு முறைப்படி கணக்குகள் பராமரித்து கணக்குகளின் நகலை தேர்தல் முடிவு அறிவிப்பு செய்யப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் உரிய அலுவலருக்கு குறிப்பிட்ட படிவத்தில் அனுப்பவும் வேண்டும். அவ்வாறு தேர்தல் செலவினக் கணக்கை தாக்கல் செய்யத் தவறும் பட்சத்தில் உங்கள் மீது தேர்தலில் போட்டியிட தகுதியின்மை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33) அரசு அலுவலர்கள் எவரையும் வாக்கு சேகரிப்பதற்கோ அல்லது வாக்காளர்களை ஈர்ப்பதற்கோ பயன்படுத்தக் கூடாது.

34) வாக்குச்சாவடிக்குள்ளும் வாக்குச்சாவடியின் அண்மையிலும் முறையாக நடந்து கொள்ள வேண்டும். தவறான நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது தவறான முறைகளில் செயல்படவோ கூடாது.

35) வாக்குச்சாவடிக்கு உள்ளும் வெளியிலும் குழப்பத்தையோ அல்லது கலவரத்தையோ ஏற்படுத்தும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுதல் கூடாது.

36) வாக்குப்பதிவு பகுதியில் வாக்குப்பதிவு முடிவடைவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக தேர்தல் கூட்டங்கள் எதையும் நடத்தவோ அல்லது அதற்கான ஏற்பாட்டை செய்யவோ கூடாது.

37) சகவேட்பாளர்களின் தேர்தல் கூட்டங்களுக்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ இடையூறு எதுவும் விளைவிக்கக்கூடாது.

38) தேர்தல் நடத்தும் அலுவலர் வெளியிடும் எந்த அறிவிப்பையும் முறையற்ற வழியில் திருத்துவதோ, மாற்றுவதோ, ஊறுவிளைவிப்பதோ, கிழிப்பதோ தேர்தல் குற்றம் ஆகும்.

40) வாக்குச்சீட்டை வாக்குச்சாவடியிலிருந்து எடுத்து செல்வதும் எடுத்துச் செல்ல உதவி செய்வதும் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதும் குற்றம் ஆகும்.

41) வாக்குப்பெட்டியினுள் முத்திரையிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் தவிர ஏனைய சீட்டுகளையோ அல்லது பொருட்களையோ போடுதல் தவறாகும்.

42) வாக்குச்சாவடியின் சுவர்களிலோ அல்லது அதன் 100 மீட்டர் சுற்றுப்பகுதியிலோ எந்தவிதமான தேர்தல் விளம்பரங்களும் செய்தல் கூடாது.

43) வாக்குச்சீட்டை அழிப்பதும், முத்திரையிடப்பட்ட வாக்குச்சீட்டைத் திருத்துவதும், வாக்குச்சீட்டைப் பெட்டியில் போடுவதைத் தடுப்பதும், அதற்கான முயற்சியில் ஈடுபடுவதும் குற்றம் ஆகும்.

44) வாக்குப்பெட்டிக்கோ, வாக்குப்பெட்டியிலுள்ள முத்திரைக்கோ, வாக்குப்பதிவு நிலைமைக்கோ ஊறு விளைவித்தல் கூடாது.

45) சக வேட்பாளர்கள் குறித்து தவறான எந்த ஒரு அறிவிப்பையும் அச்சிட்டோ அல்லது எழுதியோ வெளியிடுதல் கூடாது.

46) ஆள்மாறாட்டத்தை மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஊக்குவித்தல் கூடாது.

47) தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர் எவருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடையூறாகவோ அல்லது அச்சுறுத்துவதாகவோ செயல்படுதல் கூடாது.

## பகுதி – 9
## வாக்காளரை வாக்குக்காக அணுகும்போது கடைபிடிக்க வேண்டிய சில கட்டுப்பாடுகள்

**1)** வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிக்குள்ளும், வாக்குச்சாவடிப் பகுதியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள்ளும் வாக்கு சேகரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

2) மேலும், எந்த ஒரு நபரும் கீழ்க்கண்ட செயல்களை செய்யக்கூடாது.

அ) வாக்கு சேகரிப்பதில் வாக்காளர்களை நிர்ப்பந்தித்தல், அச்சுறுத்துதல், மிரட்டுதல், வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு செல்வதினின்றும் தடுத்தல்.

ஆ) வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் தேர்தல் அலுவலகங்கள் அமைத்தல்.

இ) வாக்குச்சாவடிக்கு அருகில் அறிவிப்பு எதையும் ஒப்பமிட்டோ, ஒப்பமிடாமலோ, அச்சடித்தோ, கையால் எழுதியோ வெளியிடுதல்.

ஈ) ஒலிபெருக்கி மூலமாக மேற்படி பகுதியில் ஓசை எழுப்புதல், கூச்சல் மற்றும் குழப்பம் ஏற்படுத்தல், தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

உ) வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களுக்கு உணவு அளித்தல், மது மற்றும் போதைப் பொருட்களை வழங்குதல்.

ஊ) வாக்குச்சாவடிக்கு செல்வதற்காக வாக்காளர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்தி தருதல்.

## பகுதி – 10
## வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கப்படுவோர்

வாக்குச்சாவடியினுள் கீழ்க்கண்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

அ) வாக்குப்பதிவு பணியாளர்கள்.

ஆ) வேட்பாளர்களின் முகவர், வாக்குச்சாவடி முகவர்

இ) வாக்காளர்கள்

ஈ) கைக்குழந்தை

உ) மாற்றுத்திறனுள்ள, கண் பார்வை இழந்த மற்றும் உடல் நலிவுற்ற வாக்காளர்களை வழிநடத்தும் ஒரு நபர்.

ஊ) வாக்காளர்களை அடையாளம் காட்டும் பொதுப்பணியாளர் அல்லது ஒழுங்கை நிலைநாட்ட வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் அழைக்கப்படும் காவலர் அல்லது அப்பணியிலுள்ள அலுவலர்.

எ) மாநில தேர்தல் ஆணையத்தால் அல்லது மாவட்ட தேர்தல் அலுவலரால் அனுமதி அளிக்கப்பட்ட நபர்.

பகுதி – 11
## வாக்குச்சாவடி முகவர்கள்

**11.1.** உங்கள் வாக்குப்பதிவு பகுதியிலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்களிக்கும் நேரத்தில் உங்களால் நேரடியாக கலந்து கொள்ள இயலாது என்பதால் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உங்கள் சார்பாக ஒரு வாக்குச்சாவடி முகவரை நீங்கள் நியமித்துக் கொள்ளலாம் என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, தகுதியுள்ள நபர் ஒருவரை நீங்கள் முறைப்படி, உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பி அவரது அனுமதி பெற்று ஒரு வாக்குச்சாவடி முகவரையும் அவருக்கு மாற்றாக ஒரு முகவரையும் நீங்கள் நியமித்துக் கொள்ளலாம். எனினும், ஒரு நேரத்தில் ஒரு முகவர் மட்டுமே உங்கள் சார்பாக ஒரு வாக்குச்சாவடியில் இருக்கலாம். மேற்படி வாக்குச்சாவடி முகவர் உரிய படிவத்தில் நீங்கள் ஒப்பமிட்ட அல்லது உங்களுடைய தேர்தல் முகவர் ஒப்பமிட்ட நியமன படிவத்தை வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் முன்பாக வாக்குச்சாவடி முகவர் ஒப்பமிட வேண்டும். மேற்படி ஒப்பமும் அவர் உங்கள் முன் இட்ட ஒப்பமும் ஒத்திருக்க வேண்டும். இரண்டு ஒப்பங்களும்

ஒத்திருந்தால் மட்டுமே, வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அவரை வாக்குச்சாவடி முகவராக பணியாற்ற அனுமதிப்பார்.

**11.2.** வாக்குச்சாவடி முகவர் வாக்குப்பதிவு ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே வாக்குச்சாவடிக்கு சென்று விட வேண்டும். இதனால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வாக்குப்பெட்டியை வாக்குப்பதிவிற்காக தயார் செய்வதை நேரடியாக கண்காணிப்பதுடன் வாக்குப்பெட்டியின் உட்புறம் வைக்கப்படும் முத்திரைத்தாளில் முகவர் ஒப்பம் இடுவதும் இயலும். அவ்வாக்குச்சாவடிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகளின் முதல் எண்ணையும் கடைசி எண்ணையும் வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வாக்குச்சாவடி முகவர்கள் உணவிற்காகவோ, ஏனைய காரணங்களுக்காகவோ வெளியே செல்ல நேரிடின் அவர்களுக்கு அனுமதிச்சீட்டு ஒன்று வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வழங்கப்படும். மேற்படி அனுமதிச்சீட்டை மட்டுமே உபயோகப்படுத்தி, வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடியை விட்டு வெளியே செல்லவோ உள்ளே நுழையவோ இயலும் என்பதால் அனுமதிச்சீட்டை பத்திரமாக வைத்திருந்து காவலர் அல்லது வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் கோரும் சமயத்தில் காண்பிக்க வேண்டும். ஒரு வாக்குச்சாவடி முகவர் வெளியே சென்றால், அவருக்குப் பதிலாக மாற்று முகவர் பணியாற்ற அனுமதிக்கப்படுவார். எந்த ஒரு நேரத்திலும், உங்களுக்காக ஒரே ஒரு முகவர் மட்டும் வாக்குச்சாவடிக்குள் இருக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வாக்குச்சாவடியின் அமைதியான வாக்குப்பதிவு பணிகளுக்கோ அல்லது முறையான செயல்களுக்கோ குந்தகம் விளைவிக்கும் எந்த முகவரும் வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வெளியேற்றப்படலாம் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். வாக்குச்சாவடி முகவர் வாக்குப் பதிவு ஆரம்பிக்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக வருகை தராவிட்டால் அந்த வாக்குச்சாவடியில் அவர் வருகை தராதபொழுது, நடந்த எந்த ஒரு சட்ட ரீதியான செயலும் திரும்ப அவருக்காக நடத்தப்பட மாட்டாது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## பகுதி – 12
## வாக்குச்சாவடி முகவரின் கடமைகள்

**12.1.** பொதுவாக உங்கள் தேர்தல் பணியில் உங்களுக்காக உதவி செய்வதற்காகவும், உங்களுக்காக அக்கறை எடுத்துக் கொள்வதற்காகவும் வாக்குச்சாவடியின் முகவர் உங்களால் நியமிக்கப்படுகிறார். அவர் :

அ) ஆள்மாறாட்டம் ஏதுமிருப்பதாக கருதும்போது, வாக்குச்சாவடி தலைமை அலுவரின் கவனத்திற்கு கொண்டு சென்று ஆள் மாறாட்டம் செய்வதை தவிர்க்க உதவலாம்.

ஆ) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் மற்றும் தாள் முத்திரைகள் ஆகியவற்றின் வரிசை எண்களை குறித்துக் கொள்ளலாம்.

இ) வாக்குப்பதிவு முடிந்த பின்பு, அந்த வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகள் மற்றும் தாள் முத்திரைகளின் வரிசை எண்களை குறித்துக் கொள்ளலாம்.

ஈ) வாக்குப்பெட்டிகள் வாக்குப்பதிவிற்காக தயார் செய்யப்படுவதற்கு முன் அவற்றுள், விதிமுறைகளின் கீழ் இருக்க வேண்டிய வாக்குச்சாவடி குறித்த முகப்புச்சீட்டு மற்றும் முகவரிச்சீட்டு தவிர, வேறு எதுவும் இல்லை என்பதை பார்வையிட்டு உறுதி செய்து கொள்ளலாம்.

உ) வாக்குப்பதிவு ஆரம்பிப்பதற்கு முன்பும், வாக்குப்பதிவு முடிந்த பின்பும் முறையாக வாக்குப்பெட்டிகளில் முத்திரை இடப்படுவதை உறுதி செய்து கொள்வதுடன், விரும்பினால் தன் முத்திரையையும் அதில் பதிக்கலாம்.

ஆனால், வாக்குச்சாவடி முகவர் அவ்வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் வாக்குச்சீட்டுகளின் முதல் எண் மற்றும் கடைசி எண்களைக் குறித்து கொள்ளலாமே தவிர, ஒவ்வொரு வாக்காளருக்கும் கொடுக்கப்படும் வாக்குச்சீட்டின் வரிசை எண்ணை நேரடியாக தெரிந்து கொள்வதோ, மறைமுகமாக குறித்து கொள்வதோ கூடாது.

**12.2.** வாக்குச்சாவடி முகவர், வேட்பாளரின் பெயர் மற்றும் அவரது தேர்தல் சின்னம் அடங்கிய எதையும் வைத்து கொண்டு வாக்குச்சாவடியினுள் பணியாற்ற கூடாது.

**12.3.** வாக்காளர்களை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, சைகை மூலமாகவோ அல்லது சங்கேத குறிகள் மூலமாகவோ எந்த ஒரு சின்னத்திலும் வாக்களிக்க தூண்டக்கூடாது.

**12.4.** தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலருக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கக் கூடாது.

## பகுதி – 13
## வாக்குச்சாவடி முகவர் கொண்டு வரக்கூடியவை

வாக்குச்சாவடி முகவர் வாக்குச்சாவடி பணிக்கு வரும்பொழுது அவரது நியமன ஆணையுடன் கீழ்க்கண்டவற்றையும் கொண்டு வரலாம்.

அ) அவ்வாக்குச்சாவடி சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியல்.

ஆ) அவ்வாக்குப்பதிவு பகுதியில் இறந்து விட்ட, அப்பகுதியை விட்டு வெளியேறிய வாக்காளர் விவரம்.

இ) அவரது உலோக முத்திரை, பேனா, பென்சில், தாள் போன்றவை.

## பகுதி – 14
## வாக்குச்சீட்டுகளை எண்ணுதல்

**14.1.** வாக்குச்சீட்டுகள் எந்த நாளில் எந்த நேரம் தொடங்கி எந்த இடத்தில் எண்ணப்படும் என்பது உங்களுக்கு முன்னரே தெரிவிக்கப்படும். வாக்கு எண்ணும் இடத்தில் நீங்களோ, உங்கள் தேர்தல் முகவரோ இருக்கலாம். ஒரு மேசைக்கு ஒரு முகவர் என்ற விகிதத்தில் நீங்கள் முகவர்களை நியமிக்கலாம். இதற்கென உள்ள படிவத்தை பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலரின் முன் ஒப்புதல் பெற வேண்டும். மேலும், அப்படிவத்தில் முகவருடைய நிழற்படம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

**14.2.** நீங்களோ உங்கள் முகவரோ குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே வாக்குகள் எண்ணும் இடத்தில் கூடுவது நலம். வாக்குப்பெட்டிகள் எத்தகைய சேதாரமோ மாற்றங்களோ (tampering) இன்றி உள்ளனவா என்பதையும், தாள்முத்திரைகள் சரியாக உள்ளனவா என்றும் மேலும் வாக்குப்பெட்டிகள் மூடி முத்திரையிடப்பட்ட பின் திறக்கப்பட்டதற்கான தடயங்கள் ஏதுமில்லை என்பதையும் நீங்கள் பார்க்கலாம். வாக்குப்பெட்டிகள் திறக்கப்பட்டு வாக்குச்சீட்டுகள் சரியாகப் பிரிக்கப்படுகின்றனவா என்பதையும் வெவ்வேறு

வேட்பாளர்களுக்கான வாக்குகள் உரிய முறையில் ஒதுக்கப்பட்டு எண்ணப்படுகின்றனவா என்பதையும் நீங்கள் பார்க்கலாம்.

**14.3.** வாக்கு எண்ணுமிடத்தில் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ள வேண்டும். வாக்கு எண்ணுகைக்கு ஊறுவிளைவிப்பது குற்றமாகும்.

**14.4.** உங்கள் முகவர்களுக்கான சிற்றுண்டியையும், உணவையும் ஏற்பாடு செய்வது உங்கள் பொறுப்பாகும்.

**14.5.** நீங்கள் விரும்பினால் வாக்குச்சீட்டுகள் கணக்கையும், எந்தெந்த வேட்பாளருக்கு எத்தனை வாக்குகள் என்ற விவரத்தையும் குறித்துக் கொள்ளலாம். இதற்கான விவரங்கள் அடங்கிய படிவங்களில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பெடுத்து கொள்ளலாம்.

**14.6.** தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் அடங்கிய தேர்தல் விவரப் பட்டியலை வழங்குவார். வெற்றி பெற்ற வேட்பாளருக்கு அதிகாரப்பூர்வமான அறிவிப்பினை உரிய படிவத்தில் தருவார். வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு மறைமுக தேர்தலுக்கான (கிராம ஊராட்சி துணைத்தலைவர்/ஊராட்சி ஒன்றிய தலைவர் மற்றும் துணைத்தலைவர்/மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்) அறிவிப்பினையும் வழங்குவார்.

## பகுதி – 15

**முடிவுரை**

மக்களாட்சியின் உயிர்த்துடிப்பாக விளங்குவது தான் ஊராட்சி அமைப்புகள். அவ்வமைப்புக்களுக்கு முறையாகப் பொறுப்பு ஏற்கும் உறுப்பினர்களை, தலைவர்களை தேர்ந்தெடுப்பது தான் இத்தேர்தலின் சீரிய நோக்கம். மக்களை பங்கு பெறச் செய்யும் மக்களாட்சியை நிலைநிறுத்தும் மாநில தேர்தல் ஆணையம் மாசற்ற ஓர் அமைப்பாகும். இத்தேர்தலில் பங்கு பெறுவோரின் கடமையையும், உரிமையையும், பொறுப்பையும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கோடிட்டுக் காட்டியுள்ளது. இச்சிறு கையேட்டை ஒரு முறைக்கு பலமுறை ஊன்றிப் படியுங்கள். உணர்ந்து படியுங்கள். நியாயமான, நேர்மையான, முறையான தேர்தலை அமைதியான முறையில் நடத்த சிறப்பாக ஒத்துழைப்பீர்களாக.

* * *

இணைப்பு

கடவுச்சீட்டு அளவு புகைப்படம்

## வேட்பாளர் வேட்புமனு தாக்கலின்போது படிவம் 3 (வேட்பு மனு) மற்றும் படிவம் 3 –A (உறுதிமொழி ஆவணம்) ஆகியவற்றுடன் சேர்த்து தாக்கல் செய்ய வேண்டிய வேட்பாளர்களின் தகவல் குறித்த சுருக்கம்

............................................ மாவட்ட ஊராட்சியின், ............................................ ஊராட்சி ஒன்றியத்தின்,
............................................ கிராம ஊராட்சியின் வார்டு எண் ........................க்கான உறுப்பினர்/தலைவர் தேர்தல்

---

.................................................... மாவட்டம், ............................................................ மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சியின் வார்டு எண் ..........................க்கான உறுப்பினர் தேர்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வேட்பாளரின் பெயர் | தமிழில் | : | ................................................................................................ |
| | | ஆங்கிலத்தில் | : | ................................................................................................ |
| 2. | வேட்பாளரின் தந்தை/கணவர் பெயர் | தமிழில் | : | ................................................................................................ |
| | | ஆங்கிலத்தில் | : | ................................................................................................ |
| 3. | வேட்பாளரின் வாக்காளர் அடையாள அட்டை எண் | | : | ................................................................................................ |
| 4. | பாலினம், வயது மற்றும் இனம் | | : | ஆண்/பெண்/மூன்றாம் பாலினம்<br>வயது ...................... வருடங்கள்<br>............................................ (SC / ST / Others) |
| 5. | முழு அஞ்சல் முகவரி | தமிழில் | : | ................................................................................................<br>................................................................................................<br>அஞ்சல் குறியீடு ................................................................... |
| | | ஆங்கிலத்தில் | : | ................................................................................................<br>................................................................................................<br>Pincode .................................................................. |
| 6. | எந்த அரசியல் கட்சியின் சார்பாக வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார் அதன் பெயர் (மற்றவர்கள் 'சுயேட்சை' என எழுதுக. கட்சி சார்பற்ற தேர்தலுக்கு ''பொருந்தாது'' என குறிப்பிடவும்.) | | : | ........................................................... |
| 7. | வேட்பாளரின் பெயர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பாகம் எண், வரிசை எண், வார்டு எண்/ கோட்டம் எண், உள்ளாட்சி அமைப்பு பெயர் மற்றும் மாவட்டம். | | : | அ) ..................................................... மாவட்டம்<br>ஆ) ..................................................... ஊராட்சி ஒன்றியம்<br>இ) ..................................................... கிராம ஊராட்சி/ பேரூராட்சி/நகராட்சி / மாநகராட்சி<br>ஈ) வார்டு/கோட்டம் எண் ..............................<br>உ) வாக்காளர் பட்டியலின் பாகம் எண் ........................ மற்றும் வரிசை எண்.......................... |
| 8. | வேட்பாளரின் தொலைபேசி எண்/ கைபேசி எண்/மின்னஞ்சல் முகவரி | | : | அ) தொலைபேசி எண் (STD குறியீடு உடன்)<br>..........................................................................<br>ஆ) கைப்பேசி எண்..........................................................<br>இ) மின்னஞ்சல் முகவரி ................................................ |
| 9. | முன்மொழிபவரின் பெயர் | | : | ................................................................................................ |

| | | | |
|---|---|---|---|
| 10. | முன்மொழிபவரின் வாக்காளர் அடையாள அட்டை எண் | : | ........................................................................................................... |
| 11. | முன்மொழிபவரின் பெயர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பாகம் எண், வரிசை எண், வார்டு எண்/ கோட்டம் எண், உள்ளாட்சி அமைப்பு பெயர் மற்றும் மாவட்டம். | : | அ) ............................................................ மாவட்டம்<br>ஆ) ............................................................ ஊராட்சி ஒன்றியம்<br>இ) ................................................................ கிராம ஊராட்சி/ பேரூராட்சி/நகராட்சி / மாநகராட்சி<br>ஈ) வார்டு/கோட்டம் எண் ................................<br>உ) வாக்காளர் பட்டியலின் பாகம் எண் .......................... மற்றும் வரிசை எண்............................ |
| 12. | வேட்பாளரின் அதிகபட்ச கல்வி தகுதி | : | |

13. வேட்பாளர் மற்றும் வேட்பாளரை சார்ந்தவரின் நிரந்தர கணக்கு எண். ( PAN) மற்றும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்த விவரங்கள்

| வ எண் | பெயர் | உறவுமுறை | (PAN) எண் | கடைசியாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்த நிதியாண்டு | வருமான வரி கணக்கில் காட்டப்பட்ட மொத்த வருமானம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1. | | வேட்பாளர் | | | |
| 2. | | கணவர்/மனைவி | | | |
| 3. | | சார்ந்தவர்–1 | | | |
| 4. | | சார்ந்தவர்–2 | | | |
| 5. | | சார்ந்தவர்–3 | | | |

14. வேட்பாளரின் குற்றப் பின்னணி

| | | |
|---|---|---|
| அ) | ஊரக உள்ளாட்சி தேர்தல் நேர்வில் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 37/பேரூராட்சி மற்றும் நகராட்சி தேர்தல் நேர்வில் 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 49/சென்னை மாநகராட்சி தேர்தல் நேர்வில் 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம், பிரிவு 52/மதுரை மாநகராட்சி தேர்தல் நேர்வில் 1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம், பிரிவு 56/கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தல் நேர்வில் 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், பிரிவு 58/.................................. மாநகராட்சி தேர்தல் நேர்வில் ................................. மாநகராட்சி சட்டம், பிரிவு 8–ல் படிக்கப்பட்டவாறு 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், பிரிவு 58–ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களின் கீழ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெறப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் தண்டனை காலங்கள் (பொருந்தாதவற்றை அடித்துவிடவும்) | ....................................................................... வழக்குகள்<br>(மொத்த வழக்குகளின் எண்ணிக்கை)<br>தண்டனை காலம்<br>.......................... வருடங்கள் .......................... மாதங்கள்<br>.......................... நாட்கள்<br>தண்டத்தொகை ரூ. ..................... |
| ஆ) | ஊராட்சிகள் சட்டம்/நகர்ப்புற சட்டங்களின்படி பதவி நீக்கம்/தகுதியின்மை கால அளவு | .................................. முதல் .................................. வரை<br>(...................... வருடங்கள்) |

15. சொத்துக்கள் விவரங்கள் (ரூபாயில்)

| விவரங்கள் | | வேட்பாளர் | கணவர்/மனைவி | சார்ந்தவர்–1 | சார்ந்தவர்–2 | சார்ந்தவர்–3 |
|---|---|---|---|---|---|---|
| அ) | அசையும் சொத்துக்கள் (மொத்த மதிப்பு) | | | | | |
| ஆ) | அசையா சொத்துக்கள் | | | | | |
| i) | சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்தின் விலை மதிப்பு | | | | | |
| ii) | மேம்பாடு மற்றும் கட்டுமானத்திற்கு செலவிடப்பட்டு இருப்பின் செலவு | | | | | |
| iii) | தோராயமான நடப்பு சந்தை விலை | | | | | |
| | அ) சுய சம்பாத்திய சொத்துக்கள் (மொத்த மதிப்பு) | | | | | |
| | ஆ) பரம்பரை சொத்துக்கள் (மொத்த மதிப்பு) | | | | | |
| | பெரு மொத்தம் | | | | | |

வாக்காளர்கள் தெரிந்துகொள்வதற்காக என்னால் தரப்பட்டுள்ள மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பாக வேட்புமனுவுடன் சமர்ப்பிக்கப்பட்ட படிவம் 3 மற்றும் 3–A–ன்படி சரி என்று உறுதியளிக்கின்றேன்.

இடம் ..................................

நாள்: ...............................

..................................................................

(வேட்பாளர் கையொப்பம்)